டாக்டர் ப.செல்வசண்முகம்

# சர்வதேச களத்தில் சித்த மருத்துவம்



**மாற்று மருத்துவ முறைகள் முழு வீரியத்துடன் மீண்டும் மக்கள் பயன்பாட்டுக்கு வரத் தொடங்கியுள்ள காலகட்டம் இது. அவற்றுள் முதன்மையான மற்றும் முக்கியமான இடத்தில் இருக்கும் சித்த மருத்துவம், நம் பண்டைத் தமிழர்களின் வாழ்வியல் மற்றும் கலாசாரத்துடன் ஒன்றியது. இந்த மருத்துவ முறையை நவீன மருத்துவத்துடன் ஒருங்கிணைத்து பல நோய்களுக்கு சிகிச்சை அளிக்க முடியும் என்பதை ‘இந்திய நலவாழ்வு நல்லறம்’ அமைப்பு மூலமாக நிரூபித்து வரும் சித்த மருத்துவர் செல்வசண்முகம், நம்முடைய இந்தப் பாரம்பரிய மருத்துவத்தைக் கடல் கடந்து மேலை நாடுகளுக்கு கொண்டுசெல்வதற்கான முயற்சிகளில் இறங்கியிருக்கிறார். தனது இந்த முயற்சி குறித்தும், ஒருங்கிணைந்த மருத்துவம் குறித்தும் இங்கே விரிவாகப் பேசுகிறார் அவர்.**

“நவீன மருத்துவத்தை மையப் புள்ளியாக வைத்து பலதரப்பட்ட ஆய்வுகள் உலகம் முழுவதும் நடந்து கொண்டிருக்கின்றன. தினம் ஒரு மருந்து கண்டுபிடிக்கப் படுவதும் மருத்துவ பரிசோதனை முறைகளில் புதிய உத்திகள் பயன்பாட்டுக்கு வருவதும் தொடர்ந்து கொண்டே இருக்கின்றன. ஆனாலும், பல நோய்களில் முழுமையான தீர்வு எட்டப்படுவதில்லை. முழுமையான தீர்வு என்பது நோய் வருவதற்கு முன்பாக உடல் எப்படி இருந்ததோ அப்படி மாற்றுவதுதான்!

ஒவ்வொரு மருத்துவ முறைக்கும் ஒரு தனிச்சிறப்பு உண்டு. அவற்றின் நுட்பம் மாறாமல், நோய்க்கும் நோயினால் பாதிக்கப்பட்டவரின் உடல் தன்மைக்கும் ஏற்றாற்போல் அவற்றை ஒருங்கிணைத்து வழங்குவதே எதிர்கால மருத்துவத் திட்டமாக இருக்கும். அதிலும் நீண்ட பாரம்பரியம் கொண்ட சித்த மருத்துவத்தை ஒருங்கிணைத்து உருவாக்கும் மருத்துவ முறை மிகுந்த பலன் அளிக்கும் என்று நம்பப்படுகிறது.

இன்றைய காலகட்டத்தில் பரவலாகியிருக்கும் இக்கருத்து 1993ம் ஆண்டே மருத்துவர். செ.நெ.தெய்வ நாயகத்தினால் (இவர் பற்றிய அறிமுகம் பெட்டிச் செய்தியில்) நடைமுறைக்கு வந்துவிட்டது. இதைத்தான் இன்று உலகளாவிய அளவில் கொண்டு செல்லும் முயற்சியில் இறங்கியுள்ளோம்.

மேலும் தொடர்வதற்கு முன்பு இந்த ஒருங்கிணைந்த மருத்துவம் (Integrative Medicine) பற்றியும், அதில் மருத்துவர் செ.நெ. தெய்வநாயகம் முறை பற்றியும் விளக்கி விடுகிறேன்.

பாரம்பரிய மருத்துவ சிகிச்சை முறைகளை நவீன மருத்துவத்துடன் இணைத்து பயன்படுத்தும் கலைதான் ஒருங்கிணைந்த மருத்துவம். இதை இரண்டு மருந்துகளையும் கலந்து கொடுத்தல் என்கிற குறுகிய வட்டத்திற்குள் அடக்கிவிட முடியாது. இது இரண்டு மருத்துவ முறைகளின் அடிப்படையை முழுமையாக உணர்ந்து உருவாக்கப்படும் மேம்படுத்தப்பட்ட மருத்துவ முறை ஆகும். தனிப்பட்ட ஒரு நோய்க்கு என்றில்லாமல், முழு உடலுக்குமான மருத்துவமாக ஒருங்கிணைந்த மருத்துவம் பார்க்கப்படுகிறது. முழு உடல் என்பது உடல், மனம், உணர்ச்சிகள் மற்றும் உயிர் ஆகியவற்றை உள்ளடக்கியது.

**மருத்துவர் செ.நெ. தெய்வநாயகம் முறை:**

ஒவ்வொரு நோயாளியும் தனித்துவமானவர். ஒரே மருந்து







ஒரே நோய்க்கு இரு வேறுபட்ட நபர்களில் வெவ்வேறு விதமாக செயல்படும். கை ரேகைகள் வெவ்வேறு விதமாக இருப்பது போல, மருத்துவமும் தனித்துவ மாக இருக்கவேண்டும். நோயின் குறிகுணங்கள், நோயாளியின் வயது, காலநிலை.. இவை எல்லா வற்றுக்கும் மேலாக, உடலமைப்பு போன்றவை எல்லாம் மருத்துவத் தின் முக்கியமான காரணிகளாக உள்ளன. பாரம்பரிய முறையான உடல் தத்துவம், நவீன மருத்துவ விஞ்ஞான அறிவு, பாரம்பரிய மருத்துவ நுண்ணறிவு போன்ற வற்றை ஒருங்கிணைத்து நோயாளிக்கு எந்த பக்கவிளைவும் இல்லாமல், குறைந்த செலவில் வேகமாக நோய் நீங்க வழிகளை செய்வதே ஒருங்கிணைந்த மருத்துவத்தின் ஒரே குறிக்கோள்.

ஒரே நோயாளியை பாரம்பரிய மருத்துவரும் நவீன மருத்துவரும், அவரவர் முறைப்படி பரிசோதித்து, கலந்தாலோசித்து, எந்த மருத்துவ முறை இந்த நோயாளிக்குத் தேவை என்று முடிவு செய்து சித்த மருந்துகள், நவீன மருந்துகள், வர்மக்கலை, யோகப் பயிற்சி, தைலங்களை தடவும் முறை, சித்த மருத்துவத்தின் வெளிப்புற சிகிச்சை முறைகள், சிறந்த உணவு மற்றும் வாழ்வியல் வழிமுறைகளை தேவைக்கேற்ப ஒருங்கிணைத்து வழங்குவதே மரு. தெய்வநாயகம் முறையாகும் (Dr Deivanayagam Model).

இந்த ஒருங்கிணைந்த மருத்துவ முறையை செயபடுத்துவதற் காகவே கடந்த 2001-ம் ஆண்டு ‘இந்திய நலவாழ்வு நல்லறம்’ என்னும் அறக்கட்டளையை தொடங்கினார் மருத்துவர் தெய்வநாயகம். சென்னை, தி.நகர் வெங்கட்நாராயணா சாலையில் இயங்கும் இந்த அமைப்பில் நாள்பட்ட சர்க்கரை நோய், ரத்த அழுத்தம், இதய நோய்கள், எலும்பு மற்றும் மூட்டு நோய்கள், காசநோய், ஆஸ்துமா, சொரியாசிஸ் போன்ற தோல் நோய்கள், கல்லீரல் - இரைப்பை நோய்கள், குழந்தைப் பேறின்மை போன்ற சிக்கலான பிரச்னைகளுக்கும் ஒருங்கிணைந்த மருத்துவம் மூலம் குறைந்த செலவில் சிகிச்சை தரப்பட்டு வருகிறது. குறைந்த எண்ணிக்கையிலான மக்களுக்கு மட்டும் பயன்பட்டு வரும் இந்த மருத்துவ முறைதான், இப்போது விரிவு பெறத் தொடங்கியுள்ளது.

**தமிழகத்திற்கு வெளியே சித்த மருத்துவ முறை ஒருங்கிணைந்த மருத்துவமாக கர்நாடகா மணிபால் பல்கலைக் கழகத்திலும் அமெரிக்கா ‘மோர்ஹவுஸ்’ மருத்துவ கல்லூரியிலும் அங்கீகரிக்கப்பட்ட மருத்துவ முறையாக உள்ளது.**

அதாவது, தமிழகத்திற்கு வெளியே சித்த மருத்துவ முறை ஒருங்கிணைந்த மருத்துவமாக கர்நாடகா மணிபால் பல்கலைக் கழகத்திலும் அமெரிக்கா ‘மோர் ஹவுஸ்’ மருத்துவக் கல்லூரியிலும் அங்கீகரிக்கப்பட்ட மருத்துவ முறையாக உள்ளது.

2014ம் ஆண்டு வட அமெரிக்க தமிழ் சங்கம் நடத்திய பேரவை



**மணிபால் பல்கலைக்கழக துணைவேந்தருடன் புரிந்துணர்வு ஒப்பந்தம்..**

விழாவில் தமிழர்களின் மருத்துவக் கலையாக சித்த மருத்துவம் அறிமுகப்படுத்தப் பட்டது. ‘இந்திய நலவாழ்வு நல்லறம்’ சார்பாக அதில் நான் கலந்து கொண்டேன். சித்த மருத்துவத்தின் அடிப்படை மற்றும் தீர்வு முறைகளை அமெரிக்கா வாழ் தமிழர்களும் ஆய்வாளர்களும் மருத்துவர் களும் அறிந்துகொள்வதற்கு ஒரு தொடக்கப்புள்ளியாக அது அமைந்தது. இந்த நிகழ்வுக்கு காரணமாக இருந்தவர்கள் இந்திய நலவாழ்வு நல்லறத்தின் தலைவர் சுபா தெய்வநாயகம், அமெரிக்க தமிழ்ச் சங்கப் பேரவை யின் தலைவர் தண்டபாணி குப்புசாமி மற்றும் செயலர் செந்தாமரை பிரபாகர் ஆகியோர்.

அதன் பின்னர் அமெரிக்கா வின் பல்வேறு தமிழ் சங்கங் களிலும் சித்த மருத்துவத்தை அறிமுகப்படுத்த எனக்கு வாய்ப்பு கிடைத்தது. சித்த மருத்துவ கருத்துகளால் ஈர்க்கப்பட்ட முனைவர் ராஜகோபால ஸ்ரீதரன், தான் பணிபுரியும் மோர்ஹவுஸ் மருத்துவப் பள்ளியில் சித்த மருத்துவத்தை ஒரு பாடத் திட்டமாக கொண்டுவர விரும்பினார். ஜியார்ஜியா மாகாணத்திலுள்ள ஒரு புகழ்பெற்ற மருத்துவக் கல்லூரி அது. 1981ம் ஆண்டு அந்தக் கல்லூரி தொடங்கிய நாள் முதலே பேராசிரியராக அவர் பணியாற்றுகிறார் என்பது குறிப்பிடத்தக்கது. அவருடன் இதயவியல் நிபுணர் சரவணன் குப்புசாமி, மருந்து அறிவியல் பேராசிரியர் ரவி பழனியப்பன், ‘Centre for Disease Control’ மையத்தின் மூத்த ஆய்வாளர் முனைவர் உதயகுமார், எமொரி பல்கலைக்கழக பேராசிரியர் செல்வராஜ் பெரியசாமி ஆகியோர் 2015ஆம் ஆண்டு கலந்து ஆலோசித்து, அதற்கு செயல் வடிவம் கொடுத்தனர்.

முனைவர் ஸ்ரீதரனின் அடுத்தடுத்த தொடர் முயற்சி களால் இன்று அங்கே மருத்துவ மாணவர்கள் சித்த மருத்துவத்தை ஒரு இணை பாடமாக கற்கத் தொடங்கி இருக்கிறார்கள். தவிர, அமெரிக்க மருத்துவர்களும் மருத்துவ மாணவர்கள், செவிலியர் கள், மருத்துவத்துறை சார்ந்த வல்லுநர்கள் 8 வார இணைய வழி வகுப்பாகக் கற்றுக்கொள்ளும் வாய்ப்பும் ஏற்பட்டுள்ளது.

இதற்கிடையே, முனைவர் ஸ்ரீதரனால் ஒருங்கிணைக்கப் பட்ட ‘கிராண்ட் ரவுண்ட்’ எனும் சிறப்புமிக்க கூட்டத்தில் சித்த மருத்துவம் பற்றி பேசுவதற்கு எனக்கு வாய்ப்புகள் கிடைத்தன. அங்கு பயிலும் மருத்துவ மாணவர்கள் நாங்கள் நடத்திய பயிலரங்குகளில் ஆர்வத்துடன் வந்து கலந்துகொண்டார்கள்.

இதுபோன்ற பல நிகழ்வு களாலும் பேராசிரியர் ஸ்ரீதரனின் தொடர் முயற்சிகளாலும் அமெரிக்கா மற்றும் கனடாவில் உள்ள மருத்துவ மாணவர்கள் மோர்ஹவுஸ் மருத்துவக்கல்லூரி வழியாக இந்தியாவுக்கு வந்து, 3 வாரங்கள் ‘இந்திய நலவாழ்வு நல்லற’த்திலும் ஒருவாரம் மணிபால் பல்கலைக்கழகத் திலும் தங்கியிருந்து, முழுநேரமாக சித்த மருத்துவத்தை கற்கும் வாய்ப்பு ஏற்பட்டுள்ளது. சென்ற செப்டம்பர், அக்டோபர் மாதங்களில் ஜேசன் அச்செம்பாங் எனும் மாணவர், பேராசிரியர் ஸ்ரீதரனுடன் கலந்துகொண்டு முதல்முறையாக சித்த மருத்துவத்தை கற்றுச் சென்றுள்ளார். அமெரிக்க மருத்துவ மாணவர் சித்த மருத்துவத்தை இந்தியாவில் வந்து கற்றுக் கொள்வது இதுவே முதல் முறை. மருத்துவ வரலாற்றில் இது முக்கிய நிகழ்வு மட்டுமல்ல; குறிப்பிடத்தகுந்த மைல்கல்லும் கூட.

நேரடியாக பயிலும் மருத்துவக் கல்வித் திட்டத்தில் பாடத்திட்ட இயக்குநராக பேராசிரியர் ஸ்ரீதரனும் இணை இயக்குநர்களாக நானும் மணிபால் பல்கலைக்கழகத்தை சேர்ந்த மருத்துவர் அருள் அமுதனும் உள்ளோம். இணைய வழியில் சித்த மருத்துவக் கல்வி



யில் மருத்துவர் உமா செந்தில் குமார் இணைந்துள்ளார். மருத்துவர் உமா செந்தில் குமார் சென்னையில் சித்த மருத்துவ கல்வியையும் அமெரிக்காவில் நவீன மருத்துவமும் கற்றவர். மிச்சிகன் மாகாணத்தில் ஒருங்கிணைந்த மருத்துவ நிபுணராக உள்ளார்.

இதற்கிடையே இன்னொரு நல்ல செய்தியாக, வட அமெரிக்காவில் வரிவிலக்கு பெற்று செயல்படும் தொண்டு நிறுவனமான ‘சித்த மருத்துவம் மற்றும் ஆய்விற்கான உலகளாவிய மையம்’ (Global Centre for Siddha Medicine Research - GCSMR), மணிபால் பல்கலைக் கழகத் துடன் புரிந்துணர்வு ஒப்பந்தம் செய்துகொண்டு மணிபால் பல்கலைக்கழகத்தில் ஒரு சித்த மருத்துவ இருக்கை ஏற்படுத்த முயன்று வருகிறது. முதல் கட்டமாக சித்த மருத்துவமனை யும் தொடங்கப்பட்டு உள்ளது. வரும் காலங்களில் சித்த மருத்துவக் கல்வி மற்றும் ஆராய்ச்சி பணிகள் மூலம் உலக அரங்கில் பலரும் சித்த மருத்துவத்தை அறிந்துகொள்ளும் ஓர் ஆய்வுமையமாக உருவாகி வருகிறது.

சித்த மருத்துவத்தை ஒருங்கிணைந்த மருத்துவமாக உலகம் முழுவதும் பரப்புவதே இந்த நிறுவனத்தின் முக்கிய குறிக்கோளாக உள்ளது. இந்தியாவில் சென்னையில் பதிவு செய்துள்ளோம். அமெரிக்காவில் திரு சிவசைலம் அவர்கள் தலைமையில் மருத்துவர்கள் ஆய்வாளர்கள் ஆர்வலர்கள் ஒத்துழைப்புடன் சிறப்பாக செயல்பட்டுக் கொண்டுள்ளது. இந்த நிறுவனம், இந்திய நலவாழ்வு நல்லறம், மணிபால் பல்கலைக்கழகம், மோர்ஹவுஸ் மருத்துவக் கல்லூரி என்கிற நான்கு அமைப்புகளும் ஒரு வலுவான கூட்டமைப்பாக இருந்து, சித்த ஒருங்கிணைந்த மருத்துவத்தில் கல்வித் திட்டங்களாகவும் ஆய்வுகளும் செய்து, செலவு குறைந்த, பக்க விளைவுகளற்ற, வீரியமிக்க மருத்துவமுறையை பரவலாக்க பாடுபட்டுக் கொண்டிருக் கின்றன. இந்த அரும் பணியில் பல முன்னணி மருத்துவ நிறுவனங்களும் ஆய்வாளர்களும் கொடையாளர்களும் இணை வார்கள் என்கிற எதிர்பார்ப்பு எங்களுக்கு இருக்கிறது. போதிய நிதி உதவியும் தகுந்த சூழலும் இருந்தால் இந்த ஒருங்கிணைந்த மருத்துவம் உலகம் முழுவதும் பரவும். சவாலான நோய்கள் வருவதை தடுப்பதும் வந்த பின்பு வேகமாக நீக்குவதற்கும் நோய் நீங்கிய பின்பு உடல் பழையபடி வலுவாக மீள்வதற்கும் இந்த ஒருங்கிணைந்த மருத்துவமே தீர்வாக அமையும்.

இப்புனித பயணத்தில் எங்களுடன் இணைய அனைவரும் வாருங்கள். நோயற்ற நலமான உலகம் படைப்போம்!”

தொகுப்பு: **பிரேமா நாராயணன்**

## மருத்துவர் செ.நெ.தெய்வநாயகம்




**1964**-ம் ஆண்டு சென்னை மருத்துவக் கல்லூரியில் ‘ஜான்ஸ்டன் தங்கப்பதக்கம்’ உள்ளிட்ட 15 பதக்கங்களுடன் தமிழகத்திலேயே சிறந்த மருத்துவராக MBBS படிப்பை முடித்தவர். பின்பு எடின்பரோ நகரில் ‘MRCP’ என்கிற உயரிய பட்டத்தைப் பெற்றவர். வெளிநாட்டில் படித்து உயரிய பட்டங்களைப் பெற்றாலும், தாய்நாட்டுக்கு சேவை செய்வதை குறிக்கோளாகக் கொண்டு தாயகம் திரும்பியவர். உதவிப் பேராசிரியராக தான் படித்த சென்னை மருத்துவக் கல்லூரியிலேயே பணியில் சேர்ந்தார். 1981-ம் ஆண்டு சென்னை மருத்துவக் கல்லூரியில் நெஞ்சக நோய் மருத்துவப் பிரிவை உருவாக்கினார். இதற்கிடையே 1979-ம் ஆண்டு ‘FRCP’ என்கிற கௌரவப் பட்டம் இவரைத் தேடி வந்தது.

பின்பு ‘தாமரை’ மருத்துவக் கல்லூரியில் (இன்றைய ராமச்சந்திரா மருத்துவப் பல்கலைக்கழகம்) மூன்று ஆண்டுகள் முதல்வராகப் பொறுப்பேற்று, பல்வேறு புதிய முயற்சிகளுடன் தரமான மருத்துவக் கல்லூரியாக அதை மேம்படுத்தினார்.

1992-ம் ஆண்டு தாம்பரம் நெஞ்சக நோய் மருத்துவமனையில் தலைமைப் பொறுப்பேற்றார். அச்சமயம் எச்ஐவி / எய்ட்ஸ் நோய் தலைவிரித்தாடியபோது சித்த மருந்துகளை நவீன மருத்துவத்தோடு ஒருங்கிணைத்து ஏறத்தாழ 60,000 நோயாளிகளின் வாழ்க்கையை மீட்டெடுத்தவர். உலகில் இப்போது இருப்பது போன்ற நவீன மருந்துகளோ, வேறு மருத்துவ முறைகளோ அந்தக் காலகட்டத்தில் இல்லை என்பது குறிப்பிடத்தக்கது. பல தமிழர்களே அறிந்திராத வரலாற்று உண்மை இது.

தமிழ்நாடு அரசு பணியிலிருந்து ஓய்வு பெற்ற பின் ‘இந்திய நலவாழ்வு நல்லறம்’ என்கின்ற அறக்கட்டளையை உருவாக்கினார். மருத்துவப் பணி மட்டுமல்லாது கல்விப்பணி, சமூக மேம்பாடு, மது ஒழிப்பு, புகையிலை மறுப்பு போன்ற பல நல்ல செயல்களுக்கு முன்னோடியாக இருந்தவர். தரமான கல்வியும் தமிழர் பண்பாடும் நல்ல மருத்துவமும் மக்களிடையே பரவுவதற்கு வித்திட்டவர்.